# இந்திய அளவையியலில் "தருக்க சங்கிரகம்" - ஒரு நோக்கு

**க.கணேசராசா**

மெய்யியல் விரிவுரையாளர்,

தத்துவம் என்பது அறிவு பூர்வமான பரந்த முறையியல் அணுகுமுறை கொண்ட ஒரு நுண்ணாய்வு. அதாவது யதார்த்தத்தைப் பற்றிய விரிவான முறையியல்சார் நுணுக்கப் பார்வையைச் செலுத்துவதே தத்துவம் எனப்படும். இத்தகைய தத்துவத்தில் பகுப்பாய்வு, விமர்சனம், வரலாற்றுப்பார்வை, உண்மையைத்தேடுதல் என்பன முக்கியமானவை. இவ்வாறான தத்துவத்தினை இந்திய தத்துவம் மேலைத்தேய தத்துவம் (Indian philosophy, Western philosophy) என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இதில் இந்திய தத்துவத்திற்கும் அளவையியலுக்கும் இடையில் இன்றியமையாத தொடர்பு காணப்படுகின்றது. அளவை என்பது ஒரு விடயத்தை அல்லது உண்மையை அறிவதற்கான வழி அல்லது கருவி என்று கூறலாம். இதனைப் பிரமாணம் என்பர். இந்திய தத்துவம் சிந்துநதிக் கரைப் பள்ளத்தாக்கிலிருந்து வளர்ந்ததாகும். ஆனால் மேலைத்தேய தத்துவம் கிரேக்கத்திலிருந்து வளர்ந்ததாகும். எனினும் மேலைத்தேய தத்துவத்தைவிட இந்திய தத்துவத்தில் வெவ்வேறுபட்ட அளவை முறைகள் வெவ்வேறுபட்ட சிந்தனைகளில் பயன்படுத்தப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

இந்திய தத்துவத்தை சிந்தனையாளர்கள் ஆஸ்திகம்(Orthodox) , நாஸ்திகம் (Heterodox) என இரண்டாகப் பிரிப்பர். அதன் வகைபாட்டினை கீழ்வரும் அட்டவணையிலிருந்து அறியலாம்.

இந்திய தத்துவம்

- வைதீக தத்துவம்
  - வேதத்தை நேரடியாக ஏற்றல்
    - சைவம்
    - வைணவம்
    - சாக்தம்
    - காணாபத்தியம்
    - சௌரவம்
    - கௌமாரம்
  - வேதத்தை மறைமுகமாக ஏற்றல்
    - நியாயம்
    - வைசேடிகம்
    - சாங்கியம்
    - யோகம்
    - மீமாம்ஸை
    - வேதாந்தம்
- அவைதீக தத்துவம்
  - சாருவகம் (உலோகாயதம்)
  - பௌத்தம்
  - ஜைனம் (சமணம்)

என்பனவையாகும்.

மேற்கூறிய தத்துவப் பிரிவுகளில் நியாயம், வைசேடிகம் என்பன இன்றியமையாத அளவையியல் பிரமாணங்களையும் யதார்த்த தர்க்கத்தையும் (Logical realism) அடிப்படையாகக் கொண்டது. நியாயத்தின் அளவையியல் நுணுக்கத்தை (Logical reachnigue) கௌதமரும் வைசேடிக அளவை முறையை கணாதரரும் சூத்திரவடிவில் வெளிப்படுத்தினர். இவர்கள் இருவரும் சிந்திக்கும் மனங்களின் சார்பற்ற அளவிலேயே ஒரு புறவுலகு இருப்பதை நம்பு கிறார்கள். இந்நியாய சூத்திரமானது கி.முன் 4ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இந்நியாய சூத்திரத்திற்கு முதலில் வாத்சாயனர் விளக்கவுரை எழுதினார். இவருக்குப் பின்னர் உத்தியோகதரின் நூலான நியாய வார்த்திகம் (கி.பி.600) காணப்படுகிறது. இதனை வாசஸ்பதி மிஸ்ரா என்பவர் தனது நூலான தீகையினூடாக (கி.பி.841) விளக்கினார். இத்தகைய தாற்பரிய தீகைக்கு உதயனர் (கி.பி.1000) தாற்பரிய தீகைப் பரிசுத்தி என்னும் தனது நூலில் விளக்கம் தருகிறார். அதேபோல் உதயனர் எழுதிய மற்றைய நூல்களுள் நியாய குசுமாஞ்சரியும் ஒன்றாகும். அதேபோல் சுமந்தப்பட்டரின் நியாய மஞ்சரியும் (கி.மு.910) குறிப்பிடத்தக்கனவாகும். அதேபோல் பௌத்த சமண அளவை நூல்களான திண்ணாகரின் நியாயப் பிரவேசம், பிரமாணச் சமுச்சயம் என்பனவும் பௌத்த அளவையியலாளரான தருமகீர்த்தியின் பிரமாண பிந்துவும் முக்கியமானவை.

பிற்பட்ட காலத்தில் கௌதமரினதும் கணாதரினுடையதும் கருத்துக்களைத் தழுவி காங்கேச உபாத்தியர் (கி.பி.1200) "தத்துவசிந்தாமணி" என்ற நூலினை எழுதினார். இந்நூலுக்குப் பின்னர் வாசுதேவ சார்வபௌமர் உரைஎழுதினார். அதேபோல் ரகுநாதசிரோமணி பட்டாச்சாரியார் "தீதிதி" நூலினை இயற்றினார். பின்னர் இத்தகைய தீதிதி என்ற நூலுக்கு பவானந்தர், மருராநாதர், ஜயதேவர், ஜயதீசர், கதாகர் போன்றோர் தனித்தனி உரைகளை இயற்றினர். இவருக்குப் பிற்பாடுதான் விஸ்வநாதர் முக்தாவலி என்னும் நூலை எழுதினார். ஆனாலும் இவர்கள் எல்லோரும் மூல நூலில் கூறப்பட்ட விடயங்களை எடுத்துக்காட்டாது விட்டனர். இக்குறைபாட்டை விஸ்வநாதர் முக்தாவலி நூலின் மூலம் (கி.பி.1650) ஓரளவிற்கு விளக்க எத்தனித்தார். இருந்தாலும் அது மேலும் விளக்கப்பட்டது அன்னம்பட்டர் என்ற சிந்தனையாளரின் தருக்க சங்கிரகம் நூலிலாகும். இந்நூல் மிகவும் பிரபல்யமானதாகும்.

**தருக்க சங்கிரகம் - ஓர் அறிமுகம்**

ஆர்.வி.கோட்வல் (R.V.Godvole) தன்னுடைய "நவீன இந்திய வரலாறு" என்ற அகராதியில் அன்னம்பட்டரின் வரலாறு பற்றிக்குறிப்பிடுகிறார். இவரது கருத்துப்படி வேதாந்தம், நியாயம், பூர்வமீமாம்சை, இலக்கணம் போன்றவற்றில் புலமை வாய்ந்தவராக இவர் காணப்பட்டார். இவர் தருக்க சங்கிரகம், தருக்க சங்கிரக தீபிகை, சித்தாந்த முகவலி, கதாகரி, நியாய பரிசேட பிரகாசிகை, பாதநாராயணரின் பிரமசூத்திர உரை போன்ற நூல்களை எழுதினார். இதில் தருக்க சங்கிரகம் இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஒரு பாடநூலாக உள்ளது.

இத்தருக்க சங்கிரகம் கி.பி.1740 இல் எழுதப்பட்டதாகும். இந்நூல் ஒரு சிறந்த நூலுக்கு இருக்கவேண்டிய துணிவு, நுட்பம், விளக்கம், (Brevity, Accuracy, Lucidity ) என்ற மூன்று பண்புகளையும் கொண்டுள்ளது. அன்னம்பட்டர் நியாயம், வைசேடிகம் என்னும் இரண்டு வகை தருக்க நூல்களையும் அவற்றின் உரைநூல்களையும் நன்றாக உணர்ந்தவராகும். “இவர் நியாய நூலிலுள்ள ஐந்து அத்தியாயங்களையும் அதிலுள்ள 539 சூத்திரங்களையும் அறிந்திருந்தார். அதேபோல் வைசேடிக நூலின் பத்து அத்தியாயங்களையும் அதிலுள்ள 373 சூத்திரங்களையும் சுருக்கி தெளிவாக விளங்கும் வகையில் தருக்க சங்கிரகத்தை எழுதினார்”.

தருக்க சங்கிரகம் என்ற சொல் தர்க்கித்து சொல்கின்ற நூல் என்பதனைக் குறிக்கும். இந்நூலில் திரவியம் முதலிய ஏழுபதார்த்தங்களையும் விளக்குவதோடு பிரமாணம் தொடர்பாகவும் விளக்கப்படுகிறது. அதாவது திரவியம் (பொருள்), குணம் (பண்பு), கருமம் (தொழில்),சாமாண்யம் (பொதுமை), விஷேடம் (சிறப்பு), சமவாயம் (ஒற்றுமை சம்பந்தம்), அபாவம்(இன்மை), போன்றவற்றை விபரமாக விளக்குகிறது. திரவியம் மேலும் பிருதிவி (நிலம்), அப்பு (நீர்), தேயு(தீ), வாயு(வளி), ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என ஒன்பது வகையாக விளக்கப்படுகிறது. அதேபோல் குணமானது உருவம், இரதம், சந்தம், பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, வெறுப்பு, முயற்சி, தர்மம், அதர்மம், வாதனை என்ற வகையில் 24 வகையாக விளக்கப்படுகிறது. அத்தோடு கருமம், சாமானியம், விஷேடம், சமவாயம், அபாவம் அத்துடன் தருக்க சங்கிரகத்தில் பிரமாணங்களாகிய காட்சி (Perception) ,அனுமானம்(Inference), உரை(Testimony) , ஒப்புமை (Analogy) என்பவைகளும் முக்கியம் பெறுகின்றன. இதில் அனுமானம் எல்லாப் பிரமாணங்களிலும் மையமாக அமைவதாக தருக்க சங்கிரகம் கூறுகிறது.

அன்னம் பட்டர் எந்த ஆசிரியரையும் சாராது இந்நூலை சமஸ்கிருத மொழியில் இயற்றினாலும் இந்நூலிலுள்ள சில தவறுகளை நிவர்த்தி செய்வதற்காகவே அவர் மீண்டும் தருக்க சங்கிரக தீபிகை (அன்னம்பட்டீயம்) என்ற நூலை எழுதினார். இவ்வாறாக இத்தருக்க சங்கிரகத்தின் சிறப்பால் பிற்பட்ட காலத்தில் பல்வேறு வகையான உரைகளைப் பல அளவையியலாளர்கள் எழுதினார்கள். அவற்றை நோக்கும் போது அவை முப்பத்தைந்தாக சுட்டிக்காட்டப்படுகிறது.

01. தருக்க சங்கிரகத் தீபிகை - இதுவும் அன்னம்பட்டராலேயே எழுதப்பட்டது. இதனை அன்னம்பட்டீயம் என வழங்குவர். இது தருக்க சங்கிரகத்திற்குச் செய்யப்பட்ட வியாக்கியானங்கள் எல்லாவற்றினுள்ளும் சிறந்ததாகும். இதில் 350 சூத்திரங்கள் உள்ளன. பின்னர் இவ்வியாக்கியானத்திற்கு மேலும் ஐந்து வியாக்கியானங்கள்உள்ளன. அவையாவன:

- அனுமதீயம் - இது மாத்துவராகிய அனுமதாசாரியாலேயே எழுதப்பட்டது. இவர் ஒரு கர்நாடாவைச் சேர்ந்தவர். இவ்வனுமதீயத்தில் 1000 சூத்திரங்கள் உண்டு.
- நீலகண்டீயம் - இது பல்லாரியில் இருந்த தெலுங்கராகிய நீலகண்ட சாஸ்திரியராலேயே ஆக்கப்பட்டது. இது 1250 சூத்திரங்களைக்கொண்டது. இதற்குப் பின்னர் தெலுங்கராகிய இராமபத்திரபட்டராலே இராமபத்திரீயம், பாஸ்கரோதயை என இரு உரை எழுதப்பட்டது.
- பட்டாபிராமியம்: தருக்க சங்கிரகத்திற்கு நிருத்தி என்ற நூலை எழுதிய பட்டாபிராம சாஸ்த்திரியரே தருக்கசங்கிரக தீபிகைக்கு ஒரு வியாக்கியானம் செய்தார். அதுவே பட்டாபிராமியமாகும்.
- முகுந்தபட்டீயம்: இது முகுந்தபட்டராலே தருக்க சங்கிரக தீபிகைக்கு எழுதப்பட்ட ஒரு உரை நூலாகும்.
- தீபிகாப்பிரகாசிகை: இது தமிழ் நாட்டில் இருந்த தெலுங்கராகிய நரசிங்க சாஸ்த்திரியரலேயே எழுதப்பட்டதாகும். இதில் 1000 சூத்திரங்கள் உண்டு. இவரே சித்தாந்த முக்தா வலிக்குப் பிரபை என்ற பெயரில் ஒரு உரையையும் எழுதியுள்ளார்.

02. நியாய போதினி: இது கௌடரும் தருக்க பாடப் பிரகாசம் செய்தவருமாகிய கோவர்த்தனமிஸ்ரராலே எழுதப்பட்டதாகும். இது 400 சூத்திரங்களைக் கொண்டது.

03. நிருத்தி: இது தமிழ் நாட்டில் இருந்த தெலுங்கராகிய பட்டாபிராம சாஸ்த்திரியராலேயே எழுதப்பட்டது. இது தருக்க சங்கிரகத்திலுள்ள வியாக்கியானங்கள் எல்லாவற்றையும் விட மிகவும் எளிமையாக உணரக்கூடிய ஒன்றாகும். இதில் 600 சூத்திரங்கள் உண்டு.

04. சித்தாந்த சந்திரோதயம்: இது கிறிஷ்ணதூர்ச்சடிதிசிதராலே எழுதப்பட்டது. இது தருக்க சங்கிரகத்திற்குரிய வியாக்கியானங்களுள் தீபிகையை ஒழித்து மற்றெல்லாவற்றிலும் மிக அரிதில் உணர்த்தப்பாலது. இதில் 1300 சூத்திரங்கள் உள்ளன.

05. தருக்க சங்கிரக சந்திரிகை : இது மகாராட்டிரராகிய முகுந்த பட்டராலேயே எழுதப்பட்டது. இதில் 1200 சூத்திரங்கள் உள்ளன.

06. பதகிருத்தியம்: இது கௌடசாஸ்த்திரிகராகிய சந்திரச்சிம்சராலே எழுதப்பட்டதாகும். இது கங்கைக்கரையிலுள்ள நாடுகளிலே கற்பிக்கப்படுகிறது. இதில் 1000 சூத்திரங்கள் உண்டு.

07. தருக்க சங்கிரகோபநியாசம் : இது மகாராட்டிர சந்நியாசியாகிய மேரு சாஸ்த்திரியாராலே எழுதப்பட்டதாகும். இது தார்க்கிகர்களாலே மிகவும் நன்கு மதிக்கப்படுகின்றது. இதில் 500 சூத்திரங்கள் காணப்படுகின்றன.

மேற்கூறியது போன்று மேலும் உரைகளாக தருக்க சங்கிரக தீபிக என்ற ஒரு நூலை ஆனந்த நாராயணரும், நிருத்தி என்பதை ஜெயந்த சாஸ்திரியும், தருக்க சங்கிரக தத்துவ பிரகாசிகையை நீலகண்தவும், தருக்க சங்கிரக தீதி என்பதை கனுமற்வியாசரின் மகன் ஹனுமட் என்பவரும் நீலகன்தீதிக என்பதை நில்காந்தன் என்பவரும் எழுதியுள்ளனர். இவ்வாறாகப் பின்னர் தருக்க சங்கிரகத்திற்கு பல உரை நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

தருக்க சங்கிரகத்தில் அளவையியில் அம்சம் மிகவும் முக்கியமானதோடு அது பிரமாணங்களினூடாக எடுத்துக்கூறப்படுகிறது. சமகால ஐரோப்பிய அறிவாராய்ச்சியியலில் அறிவின் இயல்பு முன்னது ஏதுவான, (Apirior, Apositior) பின்னது ஏதுவானது என பாகுபடுத்தப்பட்டுள்ளது. பின்னது ஏதுவான அறிவென்பது அனுபவத்திலிருந்து பெறப்படும் அறிவுத்தொகுதியினையும் முன்னது ஏதுவானதென்பது அனுபவம் சாராமுறையில் உண்மை யென அறியப்படும் அறிவுத்தொகுதியையுமாகும். இந்தப்பாகுபாடு இந்திய மரபில் காணப்படாத போதும் அனுபவம் சாரந்த (Emirical ) அனுபவம் சாரா அறிவு (Non Empirical) என்ற ஒரு வகையில் அறிவாராய்ச்சியியல் கொள்கையை ஆராய்வது இலகுவானது. இதில் குறிப்பாக தருக்க சங்கிரகம் அனுபவ அறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவே அனுமானத்தை முக்கியமான அறிவு பெறும் மூலமாக (Way of Knowledge) சுட்டிக்காட்டுகிறது. இதிலும் அனுமானம் என்றால் என்ன எனவும் அதன் பிரிவு சுவார்த்த அனுமானம், பரார்த்த அனுமானம் எனவும் அன்னம் பட்டர் சுட்டிக்காட்டுவதோடு அனுமாத்னதை வரலாற்று ரீதியான வளர்ச்சியில் அன்விஸ்கி (Anvikski) , கதா(Catha), வாதம் (Vada), ஜல்பம் (Jalpa) விதண்டை (Vitanda) என்பவற்றினூடாக விளக்கியதோடு அனுமானத்தையும் தன் பொருட்டனுமானம் (சுவார்த்த அனுமானம் -Inference for oneself) பிறர் பொருட்டனுமானம் (பரார்த்த அனுமானம் Ingerence for other self ) எனப்பாகுபடுத்தினார்.

தன்பொருட்டு அனுமானம் என்பது ஒருவர் தனது புலன்களினூடாக பெற்றுக்கொள்ளும் அனுமானமாகும். மாறாக பிறர் பொருட்டனுமானம் என்பது தான் தெரிந்த ஒரு விடயத்தை பிறரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக எடுத்துக்கூறுவதாகும். இப்பிறர் பொருட்டனுமானத்தில் வாதத்தின் முடிவுக்கு அவயங்களாக அல்லது உறுப்புகளுடாக ஐந்து விடயங்கள் விளக்கப்படுகிறது. அதாவது பிரதிக்ஞை(Statement) , ஏது (Reason), திட்டாந்தம் (Illustration) உபநயம் (Application) நிகமனம் (Conclusion) என்பனவைகளாகும். இந்த ஐந்து படிமுறைகளூடாகவும் பிறர் பொருட்டனுமானம் விளக்கப்படினும் இந்த அனுகுமுறை அரிஸ்டோட்டிலின் முக்கூற்று வாதமுறையிலிருந்து (Syllogism) வேறுபடுவதோடு பௌத்த

அனுமானத்திலிருந்து (Buddhist Logic) வேறுபடுவதனையும் அவதானிக்கலாம்.

தருக்கசங்கிரகம் பற்றிய சுருக்க அறிமுகமாகவே இக்கட்டுரை அமைகிறது. இதன் உட்பகுதிகள் மேலும் விரிவாக நோக்கப்படவேண்டியன.

**உசாவியவை**


01. இராஜாபகதூர் .ஞா (தமிழாக்கம்) (1964) - இந்து சமயத் தத்துவம் ப.92.தமிழ்நாடு

02. ஹிரியண்ணா .ஆர் (தமிழாக்கம்) 1985 - இந்திய தத்துவம் - 1 ப.55, சென்னை

03. சுப்பையா சுவாமிப்பிள்ளை. சி (1936) - தருக்க சங்கிரகமும் தருக்க சங்கிரக தீபிகையும். ப. 05. சென்னை

04. கிருஷ்ணராஜா.சோ. (1995) - சைவசித்தாந்த அறிவாராய்ச்சியில் ப.05, இலங்கை

05. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் (1990) - கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியில் வரலாறு-1 ப.397, சென்னை

06. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் (1967) - தர்க்காமிர்தம் ப.20 , திருவாவடுதுறை ஆதீனம், சென்னை

07. ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகள் (1983) - தருக்க சங்கிரகமும் தருக்க சங்கிரகதீபிகையும் பப. .01- 24 , சென்னை

08. வித்துவான் சிவானந்தையர் (1910) (மொழிபெயர்ப்பு) - அன்னம்பட்டர், தருக்க சங்கிரகமும் நியாயபோதினியும் ப.52. தெல்லிப்பழை இலங்கை

09. Atreya B.L.(1948) - The Elements of Indian Logic P.-01. Bombay

10. Pusaiker A.D. (1963) - Tharka- Samgraha of Anambaa hatta. P.58, Bombay

11. Vidyabhusana .S.C. (1978) - History of Indian Logic P.390, Delhi

12. Barlingay S.S. (1976) - A Moden Introduction to Indian Logic p.147 New Delhi

13. Matilal. B.K. (1986) - Perception , An Essay on Classical Indian Theories of Knowledge, p.27, Clarendon Press, Oxford.


SOUTH EASTERN UNIVERSITY LIBRARY